***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi***
***CC.No. 68/2023 – P.W. 2 (LW2)***

| | |
|---|---|
| *Name* | பாலமுருகன் |
| *Father/Husband's Name* | பக்கிரிசாமி |
| *Village* | மதுக்கூர் ரோடு, மன்னார்குடி |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *42* |

**எதிரி ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 25.10.2024.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். மன்னார்குடி, மாடர்ன் நகரில் ஹார்டுவேர்ஸ் எலக்ட்ரிக்கல்ஸ் கடை வைத்துள்ளேன். இந்த வழக்கின் விபத்தானது எனது கடைக்கு எதிரில் தான் நடைப்பெற்றது. ஆஜர் எதிரியை நான் பார்த்திருக்கிறேன். அவர்தான் விபத்தினை ஏற்படுத்திய காரினை ஓட்டிவந்தவர்.

2. கடந்த 10.06.2022 ம் தேதியன்று காலை 10.00 மணியளவில் மன்னார்குடி - மதுக்கூர் ரோட்டில் வடக்கிலிருந்து தெற்காக ஸ்கார்பியோ கார் ஒன்று வந்தது. விபத்தில் இறந்துபோன சுசீலா என்பவர் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி டிவிஎஸ் விகோ வண்டியில் வந்தார். ஸ்கார்பியோ கார் வேகமாக வந்து சுசீலா வந்த இருச்சக்கர வாகனத்தில் மோதியது. ஸ்கார்பியோ கார் அதிவேகமாக வந்தது. அந்த கார் இருச்சக்கர வாகனத்தில் மோதி அடிப்பட்ட இடத்திலிருந்து கொஞ்ச தூரம் தேய்த்துக்கொண்டே வந்தது. இருச்சக்கர வாகனததில் வந்தவர் ஸ்கார்பியோ காரின் அடியில் சிக்கியிருந்தார். நாங்கள் ஓடிபோய் அடிப்பட்டவரை தூக்கியபோது காதிலும் மூக்கிலும் இரத்தம் வந்தது. கால் அடிப்பட்டிருந்தது. அவரை தூக்கி தண்ணீர் கொடுத்தோம். அப்போது அவருக்கு உயிர் இழுத்துக்கொண்டு இருந்தது. அதன்பின்னர் 108 ஆம்புலன்ஸ் வந்தது. அதிலிருந்த மருத்துவர்கள் அடிப்பட்டவரை

பார்ததுவிட்டு இறந்துவிட்டார் என்று சொல்லிவிட்டார்கள். அதே ஆம்புலன்ஸ்சில் பிரேத பரிசோதனைக்காக மன்னார்குடி மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றார்கள். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

1. என் கடை தெற்கு வடக்கான சாலையில் மேற்கு பக்கமாக உள்ளது என்றால் - சரிதான். எனது கடையிலிருந்து வடக்கு திசையில் 100 மீட்டர் தொலைவில் நடந்ததாக சொல்லப்படும் சம்பவ இடம் என்றால் - சரிதான். எனது கடையில் யார் யார் பணி செய்கிறோம் என்றால் - நானும் விற்பனை செய்யும் இன்னொருவரும் இருப்போம்.

2. இந்த வழக்கு சம்மந்தமாக என்னை எப்போது எங்கு போலிசார் விசாரித்தார்கள் என்றால் - என் கடையில் வந்து விசாரித்தார்கள். இறந்துபோனவரை, காயம்பட்டவுடன் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்ல முயற்சி செய்தேனா என்றால் - நான்தான் மருத்துவமனையில் அழைத்துக்கொண்டுபோய் சேர்த்தேன். நான்தான் 108 ல் ஏற்றிவிட்டேன். இந்த விவரத்தினை போலிசார் விசாரித்தபோது சொல்லியுள்ளேனா என்றால் - சொல்லியுள்ளேன். அவ்வாறு நான் சொல்லவில்லை என்றால் - சரியல்ல.

3. சப்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரம் நான் கடையில் வியாபாரம் செய்துக்கொண்டிருந் நேரம் என்றால் - சரிதான். டமால்னு பயங்கரமான ஒரு சத்தம் ஏற்பட்டது என்றால் - சரிதான். சத்தம் கேட்டு நான் ஓடிச்சென்று பார்த்தபோது இறந்தவர் அடிப்பட்டு இரத்தத்துடன் கிடந்தார் என்றால் - சரிதான். இந்த விவரத்தினை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் - சரிதான்.

4. நான் வியாபாரம் செய்துக்கொண்டிருக்கிற பகுதியை சேர்ந்தவர் இறந்த சுசீலா என்றால் - சரிதான். எனவே நான் இந்த வழக்கில் ஒரு சாட்சியாக சேர்க்கப்பட்டு அதற்கு அனுசரனையாக முதல் விசாரணையில் சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் - சரியல்ல.

5. இந்த வழக்கின் எதிரியின் விவரங்கள் போலிசார் சொன்னதன் அடிப்படையில் தான் எனக்கு தெரியும் என்றால் - சரிதான்.

ஒம்/-எம்.சுரேஷ் கார்த்திக்,

நீதித்துறை நடுவர் எண்.1,(மு.கூ.பொ)

மன்னார்குடி.

***DEPOSITION OF WITNESS***
***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II COURT Mannargudi***
***CC.No. 68/2023 – P.W. 3 (LW3)***

| | |
|---|---|
| *Name* | சபரிராஜன் |
| *Father/Husband's Name* | மகாலிங்கம் |
| *Village* | மன்னார்குடி |
| *Taluk* | |
| *Religion* | |
| *Age* | *40* |

**எதிரி ஆஜர்.**

*Solemnly affirmed in accordance with the provisions of sec 4 of OATH Act 1969 of on the day 25.10.2024.*

***அரசு தரப்பில் முதல் விசாரணை***

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். மர இழைப்பக பட்டறை வைத்துள்ளேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். விபத்தினை ஏற்படுத்திய காரினை ஓட்டி வந்தவர் இவர்தான்.

2. கடந்த 10.06.2022 ம் தேதியன்று காலை 10.00 மணியளவில் சுசீலா தெற்கிலிருந்து வடக்கு நோக்கி விகோ வண்டியில் என் வீட்டு வழியாகதான் சென்றார்கள். என் வீடும் மர பட்டறையும் மதுக்கூர் சாலையில் கோபிரளயம் என்ற இடத்தில் உள்ளது. சுசீலா என்பவர் இருச்சக்கர வாகனத்தில் மாடர்ன் நகர் போவதற்காக இன்டிகேட்டர் போட்டு திரும்பினார். அப்போது ஸ்கார்பியோ கார் வடக்கிலிருந்து தெற்கு நோக்கி மிகுந்த வேகத்துடன் வந்து இருச்சக்கர வாகனத்தில் மோதி 5 மீட்டர் தூரம் இழுத்துக்கொண்டே சென்றது. என் வீட்டு வாசலில் நின்ற நான் அதனை பார்த்தேன். உடனே சம்பவ இடத்திற்கு ஓடிவந்து பார்த்தோம். ஸ்கார்பியோ காரின் அடியில் சுசீலா மாட்டிக்கொண்டார். நானும் பாலாவும் சீசலாவை இழுத்து பார்க்கும்போது பின்மண்டையிலும் காலிலும் அடிப்பட்டிருந்தது. கால் சுத்தமாக நொறுங்கியிருந்தது. காது மூக்கில் எல்லாம் இரத்தம் வந்தது. நாங்கள் தண்ணி தெளித்து பார்த்தோம். பிறகு 108 ஆம்புலன்ஸ் போன்செய்து அதில் வந்த

மருத்துவர்கள் அவரை இறந்துவிட்டதாக உறுதி செய்தார்கள். அந்த வாகனத்திலேயே பிரேத பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. எனது சகோதரர் பெயர் சங்கர் என்றால் - சரிதான். அவரும் எனது மர இழைப்பு பட்டறையில் வேலை செய்பவர் என்றால் - சரிதான். இழைப்பு பட்டறை தெற்கு வடக்கு சாலையில் சாலையின் மேற்கு பகுதியில் இருக்கிறது என்றால் - சரிதான்.

2. நடந்ததாக சொல்லக்கூடிய விபத்தானது எனது கடையிலிருந்து தெற்கு திசையினை நோக்கி இருக்கக்கூடிய இடம் என்றால் - வடக்கு திசையை நோக்கியிருக்கும். எனது கடைக்கு பின்னாடி ஒரு கொல்லையும் அதனை சுற்றி காம்பவுன்ட் சுவர் உண்டு என்றால் - சரிதான். என் கடையிலிருந்து என் வீடு எவ்வளவு தொலைவு என்றால் - சுமார் 15 மீட்டர் தொலைவில் உள்ளது.

3. என் இழைப்பு பட்டறை கடையின் அமைவிடம் என்பது இரண்டு புறமும் கதவுகள் வைத்து அடைக்கப்பட்ட இடம் என்றால் - ஷட்டர் போட்டு இருக்கும். என் கடையில் முன்பகுதியில் இரண்டுவிதமாக பிரிக்கப்பட்டு உள்ளே செல்லும் வகையில் அமைந்துள்ளது என்றால் - சரிதான்.

4. நான் என் வீட்டு வாசலில் நின்றுக்கொண்டுதான் நடந்ததாக சொல்லக்கூடிய விபத்தினை பார்த்தாக சொல்லும் விவரத்தினை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் - சொல்லியுள்ளேன். என்னை கடந்துதான் சுசீலா போனார் என்ற விவரத்தினை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் - சரிதான். அவ்வாறு சொல்லவில்லை என்று சொன்னால் - சரியல்ல.

5. என்னை போலிசார் எங்கு வைத்து எத்தனை மணிக்கு விசாரித்தார்கள் என்றால் - முதல் நாள் சாயந்திரமும் மறுநாள் காலையிலும் விசாரித்தார்கள். இரண்டு முறை விசாரித்தபோதும் மேற்கண்ட விவரங்களை தான் நான் சொன்னேன் என்றால் - சரிதான்.

6. ஆஜர் எதிரியை இந்நீதிமன்றத்தில் தான் முதன்முறையாக பார்க்கிறேன் என்றால் - இல்லை. நான் அப்பயே பார்த்திருக்கிறேன். சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய நேரத்தில் டமால்னு பயங்கர சத்தம் கேட்டது என்றால் - சரிதான்.

சத்தம் கேட்டுதான் நான் திரும்பி பார்த்தேன் என்ற விவரத்தினை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் - சரிதான்.

7. சுசீலா என்பவர் நான் கடை வைத்திருக்கும் பகுதியை சேர்ந்தவர் என்பதால் நான் இந்த வழக்கில் ஒரு சாட்சியாக சேர்க்கப்பட்டு முதல் விசாரணையில் அதற்கு அனுசரனையாக சாட்சியம் அளித்துள்ளேன் என்றால் - சரியல்ல. நடந்ததை நேரில் பார்த்ததை சொன்னேன். நேரில் பார்த்ததாக வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் - சரியல்ல.

8. நானும் பாலா என்பவரும் சுசீலாவை இழுத்து பார்த்தோம் என்ற விவரத்தினை போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் - சரிதான். அவ்வாறு சொல்லவில்லை என்றால் - சரியல்ல.

ஒம்/-எம்.சுரேஷ் கார்த்திக்,

நீதித்துறை நடுவர் எண்.1,(மு.கூ.பொ)

மன்னார்குடி.